**தேதி :** 30.10.2025 **SC.No. :** 169/2024 PW :4 கருணாகரன்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**(3 மற்றும் 4 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

என்னுடைய வீடு பாம்புக்கோவில் சந்தை, கருப்பசாமி கோவில் தெருவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நாளில் எங்கள் ஊரில் வாரச்சந்தை நடந்தது என்றால் சரிதான். நான் சம்பவநாள் மாலை 05.00 மணிக்கு வாரச்சந்தையில் இருந்தேன் என்றால் சரிதான். வாரச்சந்தை சம்பவயிடத்திலிருந்து 700 அடி தூரத்தில் உள்ளது. 700 அடி என்றால் கண்ணுக்கு எட்டும் தூரம் தான். சத்தமும் சம்பவயிடத்திலிருந்து வாரச்சந்தையில் கேட்கும். அந்த வாரச்சந்தை எங்கள் ஊர் மற்றும் சுற்றுப்புற ஊர்களில் முக்கியமான சந்தை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகேயுள்ள தென்வடல் தெருவில் வட கடைசியில் வாரச்சந்தை உள்ளது என்றால் சரிதான். அது தார் ரோடு என்றால் சரிதான்.

சம்பவம் நடந்தது கிழமேல் தெரு என்றால் சரியல்ல. அது தென்வடல் தெரு தான். அந்த தெருவிற்குள்ளாக சம்பவம் நடந்தது என்றால் தெருவை ஒட்டி தான் என்னுடைய மாமியார் வீடு உள்ளது. மாமியார் வீட்டிற்கு அருகில் வைத்து தான் சம்பவம் நடந்தது. என்னுடைய மாமியார் வீட்டின் வாசல் தென்வடல் ரோட்டில் உள்ளதா? என்றால் அந்த ரோட்டின் கீழ்பக்கத்தில் வடக்கு பார்த்து வாசல் உள்ளது. தென்வடல் ரோட்டில் வாசல்

இல்லை என்றால் அதனை ஒட்டி கிழமேல் தெரு போகிறது. அதில் தான் வடக்கு பக்கம் வாசல் உள்ளது. சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. சத்தம் கேட்டு நான் பக்கத்து தெருவிலிருந்து ஓடி வந்தேன். எதிரி சிவக்குமார் என்னுடைய மனைவி ராஜேஸ்வரியை வெட்டிக் கொண்டு இருந்தார்.

நான் போலீசார் விசாரணையில் "என் அத்தையிடம் நடந்ததை கேட்டபோது, என் மனைவியும், அத்தையும் மறைக்காயர் வீட்டு வாசலில் பேசிக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த சிவக்குமார் என் அத்தையையும், என் மனைவியையும் பார்த்து, தேவடியா கண்டாரஓலிகளா என் அப்பாவிற்கான சொத்தை எப்படிலா, பொட்டை பிள்ளைகளுக்கு எழுதிக்கொடுப்ப என்று அசிங்கமாக திட்டியிருக்கிறார். அதற்கு என் மனைவி ஏன் இப்படி பெரியாட்களை பார்த்து அசிங்கமாக பேசுகிறீங்க, என்று கேட்கவும், சிவகுமார் என் மனைவியையும், அத்தையையும் வெட்டினார் என்று கூறினார்." என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

வாரச்சந்தைக்கு சுற்றியுள்ள கிராமத்தினர் வருவதினால் சொக்கம்பட்டி காவல்நிலையத்திலிருந்து பாரா போலீசார் போட்டிருந்தார்கள் என்றால் எல்லா வாரமும் போட மாட்டார்கள். பிரச்சனை இருந்தால் மட்டும் போடுவார்கள். சம்பவ நாளன்று சொக்கம்பட்டி போலீசார் பாதுகாப்பு போட்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய அத்தை போலீசாரிடம் வாக்குமூலம் கொடுக்கும்போது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேனா? என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. அந்த வாக்குமூலத்தில் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

என்னுடைய ஆடையில் இரத்தம் பட்டது என்றால் சரிதான். சங்கரன்கோவில் போலீசார், சங்கரன்கோவில் மருத்துவமனையில் வைத்து என்னுடைய ஆடையை பார்த்தார்கள் என்றால் சரிதான், ஆடையை வாங்கவில்லை. ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் போலீசார் என்னுடைய ஆடைகளை வாங்கவில்லை. சம்பவ நேரத்தில், சம்பவயிடத்தில் மரைக்காயர் மனைவி, மரைக்காயர் அம்மா மற்றும் அவருடைய குடும்பத்தினர்கள் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய மாமியார் என்னுடைய மனைவி மற்றும் சகோதரிக்கு சொத்து எழுதி வைத்தது சம்பந்தமாக எதிரிகள் புகார் காவல்நிலையத்திலோ, ஊர் நாட்டாமையிடமோ, பத்திரவு பதிவு அலுவலகத்திலோ கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் பொது இடத்தில் வைத்து என்னை திட்டி வந்ததாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி தங்கம்மாள் எனது உடன் பிறந்த அக்கா என்றால் சரிதான். போலீசார் விசாரணையில், தங்கம்மாள் எனது உடன் பிறந்த அக்கா என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தங்கம்மாளை சிதம்பராபுரத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எதிரி சிவகுமார் எனது மனைவியை பார்த்து "இத்தோடு செத்து தொலை" என்று கூறி கழுத்தை நோக்கி வெட்டியதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் கழுத்தை நோக்கி வெட்டியதாக சொல்லியுள்ளேன். அதில் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கழுத்தில் எந்த பக்கம் வெட்டுப்பட்டது என்றால் இடது பக்கம் வெட்டுபட்டது. எதிரி, எனது மனைவியின் வலது முழங்காலில் வெட்டி காயப்படுத்தியதாக நான்

போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி முன்கோபி என்றாலும், ஊரில் சண்டை போடுவார் என்றாலும் சரியல்ல.

அருந்ததியர் சமுதாயத்தை சேர்ந்த மாடத்தி என்ற ஒரு பெண் நபரை என் மனைவி அடித்ததாக ஒரு பிரச்சனை எங்கள் ஊரில் இருந்தது என்றால் சரியல்ல. நானும், எனது மனைவியும் மரகதம் மகனை அடித்து கையை உடைத்ததாக ஒரு பிரச்சனை இருந்தது என்றால் என் மகனுடன் தான் பிரச்சனை இருந்தது. பின்னர், அது சமாதானமாகி விட்டது. என்னுடைய மனைவி, பூவம்மாள பேத்தி ஜேம்ஸை காரி துப்பி அவமானப்படுத்தியதாக ஒரு பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல.

என்னுடைய அக்கா ஊரில் நடந்த 4 கொலை சம்பவங்களில் நாங்கள் கொலையுண்டவர்களுக்கு எதிராக செயல்பட்டோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு அதில் எந்த தலையீடும் இல்லை. போலீசார் எங்களை விசாரிக்கவும் இல்லை. எனது மனைவியிடமும், எனது மாமியாரிடமும் எவ்வாறு சம்பவம் நடந்தது என்று மருத்துவர்கள் கேட்டார்கள் என்றால் சரிதான். என்னிடமும் கேட்டார்கள். அடையாளம் தெரிந்த ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் நபர் கருப்பசாமி கோவில் தெருவிலுள்ள எங்கள் வீட்டின் முன்னால் வைத்து தாக்கியதாக அவர்கள் மருத்துவரிடம் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

சொத்து பாகப்பிரிவனை எங்கள் ஊரில், ஊர்ப்பெரியவர்கள் முன்னிலையில் வைத்து நடக்கும் என்றால் சரியல்ல. கருப்பசாமிகோவில் அருகேயுள்ள சொத்தை விற்று 2ம் எதிரியின் கணவர் முனிஸ்வரன் என்னுடைய மனைவிக்கும், அவருடைய சகோதரி சந்திராவிற்கும் பணத்தை கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில்

கூறியுள்ளவாறு சொத்து தொடர்பான விரோதம் எனது மனைவி மற்றும் மாமியாரிடம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு தனிப்பட்ட விரோதம் இல்லை என்றால் சரியல்ல.

முதல்விசாரணையில் சொல்லியவாறு, என் மனைவிக்கும், மாமியாருக்கும் எதிரிகளால் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், என் மனைவிக்கும் மட்டுமே தெரிந்த விரோதத்தின் அடிப்படையில் என்னுடைய வீட்டிற்கு முன்னால் வைத்து எங்களுக்கு மட்டும் அடையாளம் தெரிந்த ஒரு ஆண் மற்றும் பெண் நபரால் என்னுடைய மனைவி மற்றும் மாமியார் தாக்கப்பட்டார் என்றாலும், எதிரிகளின் வேண்டாதவர்களின் தூண்டுதலின் பேரில், எதிரிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி, இந்த வழக்கில் அவர்களை இணைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கு பதிவு செய்த பின்பு, 1 மற்றும் 2 எதிரிகள் ஊரில் இல்லை என்றால் சரிதான். அவர்கள் ஊரை விட்டு சென்ற பிறகு அவர்களுடைய சொத்துக்களை நாங்கள் அபகரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. அது தரிசாக கிடக்கிறது. வாரச்சந்தை சம்பவயிடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

<u>3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

என்னுடைய மாமியார் எனது மனைவி மற்றும் அவரது சகோதரியின் பெயரில் ஊருக்கு தெற்கே சில இடங்களை பொதுவாக எழுதி வைத்தது எதிரிகளுக்கு பிடிக்கவில்லை என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவியின் தங்கையை

நொச்சிகுளத்தை சேர்ந்த மாடசாமி என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 3வது எதிரி சின்னத்தம்பியும், மாடசாமியும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். என்னுடைய மாமியார் எனது மனைவி மற்றும் அவரது சகோதரியின் பெயரில் ஊருக்கு தெற்கே சில இடங்களை பொதுவாக எழுதி வைத்தது எதிரிகளுக்கு பிடிக்கவில்லை என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2025.11.01 16:50:55 +0530